த. நா.ச.பே. எண்:34 நாள்:13.09.2021

**<u>காவல் துறை மற்றும் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை மானியக் கோரிக்கைகளின் மீதான விவாதத்திற்கு பதிலளித்து மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை</u>**

**மாண்புமிகு முதலமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆறாவது முறையாக திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சி அமைந்து, (மேசையைத் தட்டும் ஒலி) தமிழ்நாடு முதலமைச்சராக, முதல் காவல் துறை மானியக் கோரிக்கையை இந்தப் பேரவையின்முன் வைத்து, (மேசையைத் தட்டும் ஒலி) அதன்மீது மாண்புமிகு உறுப்பினர்கள் விவாதங்களின் வாயிலாக விமர்சனங்களையும், விமர்சனங்களின் மூலமாக பல நல்ல கருத்துகளையும் வழங்கியிருப்பதற்கு நான் உள்ளபடியே என்னுடைய நன்றியை, வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

என் அருகில் அமர்ந்திருக்கக்கூடிய அவை முன்னவர் அவர்கள், தனது நீர்வளத் துறையின் சார்பிலான மானியக் கோரிக்கை அறிக்கையை இந்த அவையில் முதலாவதாக தாக்கல் செய்தார். மானியக் கோரிக்கையானது ஒரு சுற்று, சுற்றி இப்போது என்னிடம் வந்திருக்கிறது. நிகழ்காலக் கழக ஆட்சி, கடந்த காலக் கழக ஆட்சியின் தொடர்ச்சி என்பதனால், காவல் துறை ஒளி பெறவும், வழிகாட்டவும் தேவையான திட்டங்கள் தொடர்ந்து செயல்படுத்தப்படும் என்ற நம்பிக்கையைப் பேரவைக்கு முன்கூட்டியே நான் தெரிவித்திட விரும்புகின்றேன்.

சமூகத்தில் சட்டத்தையும், ஒழுங்கையும் நிலைநாட்டிடும் கடமையும் பொறுப்பும் காவல் துறை வசம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. எந்த ஒரு நாட்டில் சட்டம் - ஒழுங்கு சரியாக இருக்கிறது எனச் சொல்லப்படுகிறதோ, அங்கே சட்டங்கள் ஏற்கப்பட்டு, முறையாகப் பின்பற்றப்படுகின்றன; அதன் காரணமாக அந்தச் சமுதாயம் இயல்பாக இயங்கிக் கொண்டிருக்கிறது; என்ற நம்பிக்கையை ஏற்படுத்திக்கொள்ளலாம்.

ஒரு சட்டம் நியாயமற்றது என்றால், அதற்கு கீழ்ப்படிய மறுப்பது உரிமை எனக் கருதப்படும் (When a Law is unjust, it is only right to disobey) என தாமஸ் ஜெஃபர்சன் அவர்களும், மகாத்மா காந்தியடிகள் அவர்களும் கூறியிருப்பதைக் கருத்தில் கொள்ள வேண்டும்.

முதலமைச்சராக இருந்த தலைவர் கலைஞர் அவர்கள், 15 - 3 - 1969 அன்று, "எந்தச் சமுதாயத்தில் இருந்து போலீஸ் படையினர் தேர்ந்தெடுக்கப்படுகிறார்களோ, அந்தச் சமுதாயத்தை பிரதிபலிக்கின்ற நிலைக் கண்ணாடிகளாக அப்படையினர் விளங்குவார்கள். போலீஸ் படை நன்றாக நேர்த்தியாகச் செயல்படுகிறது என்றால், அது சமுதாயத்தின் தன்மையைக் காட்டும். அதேபோல, போலீஸ் படையினர் எங்கேனும் செயலாற்றுவதில் தவறுகள் இழைத்தால், சமுதாயத்தில் நிலவும் குறைபாட்டையே அவை காட்டுகின்றன" என்று இந்த அவையிலே கூறியிருக்கிறார்கள்.

தி.மு.கழகத்தைப் பொறுத்தவரைக்கும், எதிர்க்கட்சியாக இருந்தாலும் சரி, ஆளுங்கட்சியாக இருந்தாலும் சரி, போலீசாருடைய நன்மைக்காக,

நல்வாழ்வுக்காக எப்போதும் வாதாடக் கூடியவர்கள். முதலமைச்சராக இந்தப் பேரவைக்கு நான் வழங்கும் முதல் காவல் துறையினுடைய மானியக் கோரிக்கை இது. இருந்தாலும், ஏற்கெனவே 20-7-2009 அன்றும், 10-5-2010 அன்றும், முதலமைச்சராக இருந்த முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் கட்டளையை ஏற்று, அவர் சார்பில் காவல் துறை மானியக் கோரிக்கையை முன்வைத்து, துணை முதலமைச்சர் என்ற முறையில், பதிலுரைகளை நான் ஆற்றியிருக்கிறேன் என்பதை இந்த நேரத்திலே நினைவுகூர்ந்திட விழைகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களிடம் அன்றாடம் கற்றுப் பெற்ற அனுபவம்; 7-7-2017 அன்றும், 26-6-2018 அன்றும், சட்டப் பேரவையின் எதிர்க்கட்சித் தலைவராக காவல் துறை மானியக் கோரிக்கையின்மீது எடுத்து வைத்த கருத்துகள் ஆகியவற்றின் தொடர்ச்சியாக, இன்றைக்குக் காவல் துறை மானியக் கோரிக்கை விவாதத்திற்குப் பதிலளித்திட முன்வந்திருக்கிறேன் என்பதை தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

முதலமைச்சர் பேரறிஞர் அண்ணா அவர்கள், இதே பேரவையில் காவல் துறை மானியக் கோரிக்கைக்கு 5-7-1967 அன்று பதிலுரை ஆற்றியபோது மூன்று முக்கியமான குறிக்கோள்களை காவல் துறைக்கு வரையறுத்துக் காட்டியிருக்கிறார். ‘‘நாட்டினுடைய சமுதாய வாழ்விற்கு, காவல் துறை திறமையாக இருக்க வேண்டும்; திறமையுள்ள போலீஸ் துறை அமைய வேண்டுமானால், அவர்களுக்குப் போதுமான அளவிற்கு வசதிகள் செய்து தரப்பட வேண்டும்; அந்தத் துறையிலேயே வேறு யாரும் தலையிட்டு,

தங்களுக்குச் சாதகமாக அந்தத் துறையைத் திருப்பிக்கொள்ளக் கூடாது'' என்பவைதான் பேரறிஞர் அண்ணா அவர்கள் கோடிட்டுக் காட்டிய மூன்று குறிக்கோள்கள்.

பேரறிஞர் அண்ணா அவர்களுக்குப் பிறகு முதலமைச்சராகப் பொறுப்பேற்ற முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள், பேரறிஞர் அண்ணா அவர்களுடைய காலடிச் சுவடுகளைக் கைகளால் அளந்து ஓர் அங்குலம் கூட விட்டுவிடாமல் பின்பற்றிய காரணத்தினால், தமிழகக் காவல் துறையின் மறுமலர்ச்சிக்கு அந்த மூன்று குறிக்கோள்களை நடைமுறைப்படுத்திட நாளும் முயன்றார் என்பது நாம் பெருமிதம் கொள்ளத்தக்கதாகும். காவல் துறை முன்னேற்றத்திற்கு கழக அரசு கடந்த காலங்களில் நிகழ்த்திய அரிய பல சாதனைகளின் உணர்வுடன், அந்த உணர்வு உருவாக்கித் தந்துள்ள உவகையுடன் நான் இப்போது பதிலுரையாற்றிக் கொண்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்குப் பிரபல பத்திரிகைகளும், ஆங்கில வார இதழ்களும், மாநில, தேசிய நாளிதழ்களும் பாராட்டக்கூடிய வகையில் ஆட்சி செய்து கொண்டிருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) அப்படிப் பாராட்டிய சிலவற்றை இந்த அவையில் நான் பதிவு செய்ய விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

உலகப் புகழ்பெற்ற எக்கனாமிஸ்ட் இதழின் ஜூலை 3 ஆம் தேதியிட்ட பதிப்பில், முதலமைச்சராக உள்ள எனது தலைமையிலான அரசின் செயல்பாடுகளை பாராட்டி கட்டுரை வெளியாகியுள்ளது. இந்து குழுமம்

வெளியிடும் பிரண்ட்லைன் இதழில் In action from Day 1 என்றும்; Panel for Progress என்றும்; Free rides for women's empowerment என்றும் பல்வேறு கட்டுரைகள் அரசின் செயல்பாடுகளை வரவேற்று, கடந்த சில மாதங்களில் வெளியாகியிருக்கின்றன.

தமிழ்நாடு முதலமைச்சரும், அமைச்சர்களும் ஓய்வுறக்கம் இன்றி பணியாற்றுவதைச் சுட்டிக்காட்டி Rising Sun Never Sets என்று குறிப்பிட்டு 'தி வீக்' இதழ் செய்தி வெளியிட்டது. இந்தியா டுடே இதழ் Solid Start என்று இந்த அரசின் 100 நாட்கள் செயல்பாடுகளைப் பாராட்டி, ஆகஸ்ட் 2 ஆம் தேதியிட்ட இதழில் கட்டுரை வெளியாகியிருக்கிறது. மேலும், a refreshing focus on efficiency and transparent governance என்றும் எழுதியது. இந்துஸ்தான் டைம்ஸ் நாளேடு, '100 Days of DMK: Activities of HR&CE are back to life' என்று இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறையில் நமது செயல்பாடுகளைப் பாராட்டியிருக்கிறது.

தினத்தந்தி நாளிதழ் 'மு.க. ஸ்டாலின் கொண்டு வரும் திராவிட மாடல் வளர்ச்சி' என்று ஜூலை 14 தேதியிட்ட இதழில் தலையங்கம் தீட்டியிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) இப்படி தமிழ்நாட்டில் இருந்தும், பிற மாநிலங்களிலிருந்தும், டெல்லியில் இருந்தும் உலகின் பிற பகுதிகளில் இருந்தும் வெளியாகக்கூடிய முன்னணி இதழ்கள் அனைத்தும் போற்றப்படும் விதத்தில் முன்னேற்றத்தை நோக்கியே இந்த அரசு போய்க்கொண்டிருக்கிறது என்பது தெளிவாகத் தெரியும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஒருமாத காலமாக நடந்த மானியக் கோரிக்கை விவாதத்தில் பங்கெடுத்துப் பேசிய அமைச்சர்கள் அனைவரும் இந்த அரசிடம் என்னவெல்லாம் இருக்கிறது என்பதை விரிவாகப் பேசியிருக்கிறார்கள். உள் துறை சார்பில் என்னைக் கேட்டால், எதுவெல்லாம் இல்லை என்பதைத்தான் நான் சொல்ல முடியும். இந்த ஆட்சியில் வன்முறைகள் இல்லை! சாதிச் சண்டைகள் இல்லை! (மேசையைத் தட்டும் ஒலி) மத மோதல்கள் எழவில்லை! துப்பாக்கிச் சூடுகள் இல்லை! அராஜகங்கள் இல்லை! இதுதான் இந்த ஆட்சியின் மாபெரும் சாதனையாகும். உள் துறை சார்பில் சொல்ல விரும்புவது, தமிழ்நாட்டு மக்கள் அமைதியான வாழ்க்கை வாழ்வதற்கான அடித்தளத்தை அமைத்துத் தந்திருக்கின்றோம். இதனை உருவாக்கிக் கொடுத்த காவல் துறை அதிகாரிகள் தொடங்கி, கடைநிலை காவலர் வரைக்கும் அனைவருக்கும் என்னுடைய நன்றியை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதிலும் கொரோனா ஊரடங்கு காலத்திலும் விடுப்பே இல்லாமல் தங்கள் உயிரைப் பணயம் வைத்து பணியாற்றியவர்கள் காவல் துறையைச் சார்ந்தவர்கள். அவர்கள் தியாகத்திற்கு ஈடு இணை எதுவும் கிடையாது. ஆனாலும், அவர்களுக்கு நாம் காட்டும் நன்றியின் அடையாளமாக 25 இலட்சம் ரூபாய் வழங்கினோம். காவலர்கள் அனைவருக்கும் தலா 5,000 ரூபாய், கொரோனா நிவாரண நிதியாக வழங்கிய அரசுதான் இந்த அரசு. இதற்கென 58.27 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டது. விடுப்பே இல்லாமல் பணியாற்றும் காவலர்களின் கவலையைப் போக்க வாரத்தில் ஒருநாள் விடுப்பு

வழங்கப்பட்டுள்ளது. 968 உதவி ஆய்வாளர்களுக்குப் பணி நியமன ஆணை வழங்கப்பட்டுள்ளது. 10 கோடி ரூபாய் செலவில் ஒருங்கிணைந்த சைபர் பயிற்சி வளாகம் அமைப்பதற்கு அடிக்கல் நாட்டியிருக்கிறேன். தடய அறிவியல் துறை சார்பில் இளநிலை அறிவியல் அலுவலர் பணியிடங்களுக்காக 62 பேருக்கு பணி ஆணை வழங்கப்பட்டுள்ளது.

சட்டமன்றத் தேர்தலுக்கு முன்னதாக, தமிழ்நாட்டின் அனைத்துத் தொகுதிகளுக்கும் சென்று நான் மக்களிடம் மனுக்களைப் பெற்றேன். அந்த மனுக்களை ஆட்சிக்கு வந்த 100 நாட்களில் நிறைவேற்றிக் காட்டுவேன் என்று சொன்னேன். அந்த மனுக்களில் உள் துறை சார்பாக வந்த மனுக்கள் 1,498. இந்த மனுக்கள் அனைத்துக்கும் தீர்வு கண்டிருக்கிறோம் என்பதையும் இந்த மன்றத்துக்கு நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

காவலர்கள் நலன் பேணுவதில் திராவிட முன்னேற்றக் கழக அரசு எப்போதும் சிறப்புக் கவனம் செலுத்தி வருகிறது. ஒவ்வொரு முறை ஆட்சியில் அமருகின்றபோதும், காவலர்கள் அனைவரது கவலையையும் தீர்க்கும் வகையில் பல்வேறு திட்டங்களை நிறைவேற்றிக் கொடுத்திருக்கிறோம். காவல் துறையை நவீனப்படுத்துவதற்காக, 1969 ஆம் ஆண்டு முதலாவது காவல் துறை ஆணையம், 1989 ஆம் ஆண்டு இரண்டாவது காவல் துறை ஆணையம், 2006 ஆம் ஆண்டு மூன்றாவது காவல் துறை ஆணையம் அமைத்து, அந்த

ஆணையங்களின் பரிந்துரைகளை நிறைவேற்றியவர்தான் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

1971 ஆம் ஆண்டு காவல் துறையில் கம்ப்யூட்டர் பிரிவைத் தொடங்கியதும், வீரதீர செயல்கள்புரியும் காவலர்களுக்கு அண்ணா பதக்கம் வழங்கத் தொடங்கியதும் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் தலைமையிலான தி.மு.கழக ஆட்சியில்தான். அவரது வழிநின்று, காவலர்களின் கோரிக்கைகள் மற்றும் தேவைகளை அறிவதற்காக காவல் துறை ஆணையம் விரைவில் அமைக்கப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

தி.மு.க.வின் தேர்தல் அறிக்கையில் காவல் துறையினருக்கான பல்வேறு வாக்குறுதிகள் வழங்கப்பட்டிருக்கின்றன. அவற்றைப் படிப்படியாக, நிச்சயமாக, உறுதியாக நிறைவேற்றுவோம். தேர்தல் வாக்குறுதியின்போது சொல்லப்பட்டதில் சில முக்கியமான வாக்குறுதிகளின்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகளை மட்டும் இந்த அவைக்கு நான் நினைவூட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

குடியுரிமைத் திருத்தச் சட்டம், வேளாண் சட்டங்கள், சேலம் எட்டு வழிச்சாலை, கூடங்குளம் அணு உலை, மீத்தேன், நியூட்ரினோ, ஹைட்ரோகார்பன் ஆகியவற்றுக்கு எதிரான போராட்டங்களில் கலந்துகொண்டவர்கள்மீது போடப்பட்ட வழக்குகளை வாபஸ் பெறுவதாகச் சொன்னோம். அதன்படி, 5,570 வழக்குகள் வாபஸ் பெறப்பட்டிருக்கின்றன.

தூத்துக்குடி ஸ்டெர்லைட் ஆலைக்கு எதிராக கடந்த ஆட்சியின்போது, 22-5-2018 அன்று நடந்த போராட்டத்தில் துப்பாக்கிச் சூடு நடத்தி 13 பேர் கொல்லப்பட்டிருக்கிறார்கள். அப்பாவி மக்கள்மீது போடப்பட்ட 36 வழக்குகள் திரும்பப் பெறப்பட்டுள்ளன. பல்வேறு வழக்குகளில் சிக்க வைக்கப்பட்ட 93 பேருக்கு தலா ஒரு இலட்சம் ரூபாய் நிவாரணத் தொகையாகத் தரப்பட்டுள்ளது. இறந்தவர் குடும்பத்தைச் சேர்ந்தவர்களுக்கும், காயம் அடைந்தவர்களுக்கும் அவர்களது தகுதிக்கு ஏற்ற வேலைவாய்ப்பை வழங்கி இருக்கிறோம்.

ஸ்டெர்லைட் ஆலை துப்பாக்கிச் சூடு தொடர்பாக நீதி விசாரணை செய்ய அமைக்கப்பட்ட ஆணையத்தின் பதவிக் காலத்தை நீட்டித்துக் கொண்டே வந்திருக்கிறது கடந்த அ.தி.மு.க. அரசு. ஆட்சி அமைந்ததும் அந்த ஆணையத்தின் இடைக்கால அறிக்கையை இந்த அரசு பெற்றிருக்கிறது. இறுதி அறிக்கையை பிப்ரவரி 22 ஆம் நாளுக்குள் கொடுக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறோம். அறிக்கை கிடைத்த பிறகு அடுத்தகட்ட நடவடிக்கையை நிச்சயமாக நாங்கள் எடுப்போம்.

பொள்ளாச்சி பாலியல் வன்முறை வழக்கைப் பொறுத்தவரையில், அதனை CBI விசாரணை நடத்தி வருகிறது. இந்த ஆட்சி பொறுப்பேற்றவுடன் திருமதி முத்தரசி என்ற CBCID பெண் எஸ்.பி. அதிகாரி இதற்காக நியமிக்கப்பட்டு, பாதிக்கப்பட்ட பெண்களுக்கு நீதி கிடைக்கவும், குற்றவாளிகளுக்கு உரிய தண்டனை கிடைத்திடவும், வழக்கினை விரைந்து நடத்திட முழு ஒத்துழைப்பு வழங்கி வருகிறது. அம்மையார் ஜெயலலிதா அவர்களுடைய மரணத்தில் உள்ள மர்மங்கள் குறித்து விசாரிக்க கடந்த அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில்

அமைக்கப்பட்ட ஓய்வுபெற்ற நீதியரசர் ஆறுமுகசாமி ஆணையத்தின் விசாரணையையும் விரைந்து முடிக்கச் சொல்லியிருக்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, லஞ்ச ஒழிப்புத் துறைக்கு வந்துள்ள புகார்களின் அடிப்படையிலும் படிப்படியாக விசாரணைகள் நடந்து வருகின்றன. இவையனைத்துமே தேர்தல் காலத்தில் மக்கள் மன்றத்தில் கொடுத்த வாக்குறுதிகள்தான். அதனைத்தான் இப்பொழுது நாங்கள் நிறைவேற்றத் தொடங்கியிருக்கிறோம்.

'இதுமட்டும்தானா**?**' என நீங்கள் நினைத்து விட வேண்டாம். மாறி வரும் குற்றங்கள், மக்களின் பாதுகாப்புச் சூழல்கள் ஆகியவற்றை மனதில் கொண்டு, சென்னை பெருநகரக் காவல் துறையை மற்ற பெருநகரங்களில் உள்ளதுபோல் சீரமைத்திட இந்த அரசு எண்ணியுள்ளது. அந்த அடிப்படையில், ஆவடி, தாம்பரம் ஆகிய இடங்களைத் தலைமையிடமாகக் கொண்டு தனித் தனி புதிய காவல் ஆணையரகங்கள் அமைக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

சிறைக் கைதிகளின் முன்விடுதலை தொடர்பான சட்டம் மற்றும் விதிகளுக்குட்பட்டு, பேரறிஞர் பெருந்தகை அறிஞர் அண்ணா அவர்களுடைய 113-வது பிறந்தநாள் வருகிற செப்டம்பர் 15 ஆம் தேதியன்று வருகிறது. அப்போது, நீண்டகாலம் சிறைவாசம் அனுபவித்துவரும் 700 ஆயுள் தண்டனைக் கைதிகளின் தண்டனையை நல்லெண்ணம் மற்றும் மனிதாபிமன அடிப்படையில் குறைத்து, முன்விடுதலை செய்ய இந்த அரசு உரிய நடவடிக்கை மேற்கொள்ளும். (மேசையைத் தட்டும் ஒலி) இதற்கான அரசாணை விரைவில் வெளியிடப்படும்.

மக்கள்தொகைக்கேற்ப மக்களுக்கு சேவையாற்ற 10 புதிய காவல் நிலையங்கள் அமைக்கப்படும். தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகளை விரைந்து மேற்கொள்வதற்கு வசதியாக 4 புதிய தீயணைப்பு மற்றும் மீட்புப் பணி நிலையங்கள் அமைக்கப்படும்.

இந்த அரசைப் பொறுத்தவரையில், குற்றம் என்ற ஒன்று நடந்தால் சாதி, மதம், இனம், மொழி, கட்சி பார்க்காமல் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நான் காவல் துறைக்குக் கண்டிப்பான உத்தரவை வழங்கியிருக்கிறேன். அதனடிப்படையில், தனியார் பள்ளியில் மாணவிகளுக்குப் பாலியல் தொல்லை கொடுத்ததாக ஒரு ஆசிரியர்மீது புகார் வந்ததும், அவர் உடனடியாக கைது செய்யப்பட்டார். விளையாட்டுப் பயிற்சியாளர்கள் இருவரும் உடனடியாகக் கைது செய்யப்பட்டார்கள். பாலியல் புகார் எழுந்ததைத் தொடர்ந்து தனியார் பள்ளி உரிமையாளர் ஒருவரை உடனடியாகக் கைது செய்தோம். பட்டியலினத்தவரை விமர்சித்துப் பேட்டி அளித்த ஒரு நடிகை உடனடியாகக் கைது செய்யப்பட்டார். PUBG விளையாட்டு மூலமாக Youtube Channel-ல் ஆபாசமாக நடந்துகொண்ட ஒருவர் கைது செய்யப்பட்டார். இவற்றை நினைவூட்டுவதற்குக் காரணம், புகார் எழுந்ததும், எவரையும் தயவு தாட்சண்யம் பார்க்காமல் கைது செய்யும் அரசாக இந்த அரசு இருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்டத்தான் இதைச் சொன்னேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோல், மணல் கடத்தல், குட்கா விற்பனை, பொது விநியோகப் பொருட்கள் கடத்தல் ஆகிய குற்றங்களில் ஈடுபட்டவர்கள் கைது செய்யப்பட்டு, அவர்கள்மீதெல்லாம் வழக்கும் பதிவு செய்யப்பட்டிருக்கிறது. காவல் துறையை

நவீனப்படுத்த வேண்டும். இன்றைக்கு அனைத்தையும் விஞ்சியதாக cyber குற்றங்கள் பெருகிவிட்டன. தொழில்நுட்பம் வளர வளர அதனைக் குற்றம் செய்வோர் பயன்படுத்திக் கொள்கிறார்கள். தொழில்நுட்பத்தைப் பயன்படுத்திச் செய்யும் குற்றங்கள் பெருகிவிட்டன. இணையவழிப் பொருளாதாரக் குற்றங்கள் அதிகமாகிவிட்டன. தொழில்நுட்பச் சேவைகளைத் திருடுவது, தகவல்களை அழிப்பது, முகம் தெரியாதவர்களை ஏமாற்றுவது, இணையதளங்கள் மூலமாக மிரட்டுவது, போலிக் கணக்குகள், போலிப் பெயர்கள் ஆகியவை பெருகிவருகின்றன. இந்த இணையதளங்கள் மூலமாக பாலியல் குற்றங்களும் அதிகமாகி வருகின்றன. நிதிக் குற்றவாளிகளும், பாலியல் குற்றவாளிகளும் நவீன தொழில்நுட்பத்தை அதிகமாகப் பயன்படுத்துகிறார்கள். இதனைக் கண்டுபிடித்து தடுப்பதற்கான நவீன வழிமுறைகள் கொண்டதாக தமிழ்நாடு காவல் துறை நிச்சயமாக மாற்றியமைக்கப்படும்.

தடய அறிவியல் துறையானது மாநில காவல் துறை, மத்திய புலனாய்வுத் துறை மற்றும் தேசிய புலனாய்வுத் துறை ஆகிய புலனாய்வு அமைப்புகளுக்கு குற்றங்களைக் கண்டறிவதற்குரிய அறிவியல்சார் சேவைகளை வழங்கி வருகிறது. குற்றப் புலனாய்வில் எந்த ஒரு சவாலையும் எதிர்கொள்ளும் வகையில் தடய அறிவியல் துறையின் பகுப்பாய்வுத் திறனை மேம்படுத்த அரசு தொடர்ந்து ஊக்குவித்து வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தீயணைப்புத் துறைக்கு வாகனங்களே முதுகெலும்பாக அமைகிறது. ஆகையால் உழைப்புக் காலம் முடிந்த

தீயணைப்பு வாகனங்களுக்கு மாற்று ஊர்திகள் கொள்முதல் செய்ய துரித நடவடிக்கை மேற்கொள்ளப்படும். மேலும், இத்துறைப் பணியாளர்களுக்கு சர்வதேச தரத்தில் பயிற்சி அளிப்பதுடன், அவர்களது உயிர்காக்க மேம்பட்ட பாதுகாப்புக் கவசங்களை வழங்கவும் முன்னுரிமை வழங்கப்படும்.

காவல் துறை என்றாலே குற்றங்களைத் தடுக்கும் துறையாக, தண்டனை வாங்கித் தரும் துறையாக மட்டும் அனைவரும் நினைக்கிறார்கள். காவல் துறை என்பது குற்றங்கள் நடக்காத வகையில் சூழ்நிலையை உருவாக்கித் தரும் துறையாக மாறவேண்டும் என்பதுதான் என்னுடைய ஆசை; இந்த அரசினுடைய எண்ணம். அதனை நிறைவேற்றிக் காட்டும் விதத்தில் இந்த அரசின் செயல்பாடுகள் இருக்கும் என்று நான் உங்களுக்கெல்லாம் உறுதியாக தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

காவல் துறை மானியக் கோரிக்கைமீது நடைபெற்ற விவாதத்திலே இங்கு இருக்கக்கூடிய மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும் தங்களுடைய கருத்துகளை தெரிவித்திருக்கிறார்கள். அதற்கு இந்தத் தருணத்தில் நான் பதிலுரையாற்றக் கடமைப்பட்டிருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஈ.ஆர். ஈஸ்வரன் அவர்கள் போலீஸ் அதிகாரிகளுக்குப் பயிற்சி வழங்குவது குறித்துப் பேசினார். போலீஸ் அதிகாரிகளைப் பொறுத்தவரையில், ஒவ்வொரு பதிவிக்கும் ஏற்றவாறு பல்வேறு பயிற்சிகள், புத்தாக்கப் பயிற்சிகள் எல்லாம் Police Academy-ல் வழங்கப்பட்டு வருகிறது. அதை மேலும் விரிவுபடுத்தி உயர் போலீஸ் அதிகாரிகளுக்கும்

குறிப்பிட்ட கால இடைவெளியில் பயிற்சி வழங்குவது குறித்து அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோன்று, மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன் அவர்கள் தமிழ் வழியில் பயின்றவர்களுக்கு முன்னுரிமை வழங்குவது குறித்து இங்கே பேசினார். இட ஒதுக்கீடு தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வு ஆணையத்தால் நடத்தப்படும் தேர்வுகளில் 20 விழுக்காடு முன்னுரிமை வழங்கப்படும் என்று 2010 ஆம் ஆண்டு கழக ஆட்சியில்தான் அது செயல்படுத்தப்பட்டது. இடைப்பட்ட 10 ஆண்டுகளில் அவ்வாறு செயல்படுத்தப்படவில்லை. பல வழங்குகள் நீதிமன்றத்திற்குச் சென்றன. ஆனால், இப்பொழுது திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பேற்றபொழுது தெளிவான உத்தரவைப் பிறப்பித்திருக்கிறோம். மனிதவள மேலாண்மைத் துறையால் 16-8-2021 அன்று வெளியிடப்பட்ட அரசாணை எண் 82-ல் குறிப்பிட்டுள்ளபடி வரையறுக்கப்பட்ட கல்வித் தகுதி வரை தமிழ் வழியில் பயின்றவர்களுக்கு மட்டுமே 20 விழுக்காடு முன்னுரிமை வழங்கப்படும் என்று அறிவித்திருக்கிறோம் என்பதை அவருக்கு நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோன்று, மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. சிந்தனைச்செல்வன் அவர்கள் ஒன்றை குறிப்பிட்டார்; பலவற்றைக் குறிப்பிட்டார், இருந்தாலும் ஒன்றை மட்டும் தேர்வு செய்து அதற்கு நான் பதில் சொல்ல விரும்புகிறேன். ஓய்வுபெற்ற காவலர் மற்றும் காவல் அதிகாரிகளுக்கு நல வாரியம் அமைக்கப்படவேண்டும்

என்ற கோரிக்கையை விடுத்தார். அந்தக் கோரிக்கை அரசின் பரிசீலனையில் இருக்கிறது. நல வாரியம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

அதேபோன்று, மாண்புமிகு உறுப்பினர் திரு. நயினார் நாகேந்திரன் அவர்கள் ஒரு கோரிக்கையை வைத்தார்கள். 1996 ஆம் ஆண்டு நியமனம் செய்யப்பட்ட உதவி ஆய்வாளர்களின் பதவி உயர்வு குறித்து இங்கே அவர் பேசினார். அரசு ஊழியர்கள் ஓய்வுபெறும் வயதை அ.இ.அ.தி.மு.க. ஆட்சியில் 59 என்றும், பிறகு 60 என்றும் உயர்த்தியதாலும், 85 காவல் துணைக் கண்காணிப்பாளர்கள் நேரடியாகத் தேர்வு செய்யப்பட்டு பணியில் சேர்ந்திருப்பதாலும், 1996 ஆம் ஆண்டு நேரடி காவல் உதவி ஆய்வாளர் பணிக்காகத் தேர்வு செய்யப்பட்டவர்களுக்கு காவல் துணைக் கண்காணிப்பாளர்களாக பதவி உயர்வு வழங்குவது காலதாமதமாகிறது. ஆனாலும், அவர்களுக்கு 1-6-2022-லிருந்து பதவி உயர்வு வழங்குவதற்கான நடவடிக்கைகளை ஏற்கெனவே இந்த அரசு எடுப்பதற்கு துவங்கியிருக்கிறது என்பதை மகிழ்ச்சியுடன் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோன்று, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. ஜி.கே. மணி அவர்கள் பேசும்போது மாநில ஆவணக் காப்பகத்தின் தற்போதைய நிலை குறித்து அவர் கவலை தெரிவித்தார். மாநில ஆவணக் காப்பகம் செயல்படுவதற்கும், உரிய அறிக்கைகளை வெளியிடுவதற்கும் இந்த அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோன்று, மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. செல்வப்பெருந்தகை அவர்கள் பேசும்போது காவலர் மருத்துவமனையை பல்நோக்கு மருத்துவமனை தரத்திற்கு இணையாக உயர்த்த வேண்டுமென்று கூறியிருந்தார். அதையும் இந்த அரசு நிச்சயம் பரிசீலிக்கும். (மேசையைத் தட்டும் ஒலி) அதேபோன்று, அ.தி.மு.க. கட்சியைச் சேர்ந்த மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினர் திரு. பால் மனோஜ்பாண்டியன் அவர்கள் பேசும்போது, பிரகாஷ் சிங் வழக்கில் சொல்லப்பட்டுள்ள காவல் துறை சீர்திருத்தங்களை முழுமையாக நிறைவேற்றியது அ.தி.மு.க. ஆட்சிதான் என்று குறிப்பிட்டார். ஆனால், நான் சொல்ல விரும்புவது தி.மு.க. அரசுதான் காவல் துறை சீர்திருத்தங்களைச் செயல்படுத்த முதன்முதலில் நடவடிக்கை எடுத்தது. (மேசையைத் தட்டும் ஒலி) 14-5-2008 அன்றே இதே அவையில் தமிழ்நாடு போலீஸ் Tamil Nadu Police Bill, 2008 கொண்டுவந்தது கழக அரசுதான். அதன் தொடர்ச்சியாக பிறகு வந்த அ.தி.மு.க. ஆட்சியில் 2013-ல் சில திருத்தங்கள் கொண்டுவரப்பட்டன. ஆனால், அந்த சட்டத்தின்படி அ.தி.மு.க. அரசு 10 ஆண்டுகளில் நடந்து கொள்ளவில்லை. ஓய்வு பெறும் நாளில் இந்த வழக்கின் சீர்திருத்தங்களைப் பயன்படுத்தி DGP நியமனங்களை செய்து, அது நீதிமன்றம் வரை சென்று வழக்கெல்லாம் நடைபெற்றதை மறந்திருக்கமாட்டீர்கள். ஆனால், திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பேற்ற நேரத்தில், DGP ஆக திரு. திரிபாதி அவர்களது பதவிக் காலத்தை நிறைவு செய்ததாக இருக்கட்டும்; இப்போது பொறுப்பேற்றிருக்கக்கூடிய புதிய DGP திரு. சைலேந்திர பாபு அவர்களின் தேர்வு மற்றும் நியமனமாக இருக்கட்டும்; முற்றிலும் பிரகாஷ்சிங் வழக்கின் அடிப்படையில்தான்

செய்யப்பட்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். ஆகவே, பிரகாஷ்சிங் வழக்கில் வழங்கப்பட்ட தீர்ப்பின் அடிப்படையில் எஞ்சியுள்ள காவல் துறை சீர்திருத்தங்களை நிறைவேற்ற இந்த அரசு நிச்சயம் நடவடிக்கை எடுக்கும்.

அதேபோல, போக்சோ வழக்கு விசாரணை குறித்துப் பேசினார். பெண்களுக்கு எதிரான குற்றங்களைப் பொறுத்தமட்டிலும், இந்த அரசு தீவிர நடவடிக்கை எடுத்து வருகிறது. போக்சோ வழக்குகளை விரைந்து விசாரித்து, நீதி வழங்கிட அனைத்து மாவட்டங்களிலும் தனி நீதிமன்றங்கள் நிறுவ அரசு நிச்சயம் நடவடிக்கை எடுக்கும்.

மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இங்கே பேசியபோது, தமிழ்நாடு முழுவதும் 4.64 இலட்சம் CCTV கேமிராக்கள் பொருத்தப்பட்டன என்றும், அவற்றில் 2.50 இலட்சம் கேமிராக்கள் சென்னை மாநகரில் அ.தி.மு.க. ஆட்சியில் பொருத்தப்பட்டன என்றும் தெரிவித்தார்கள். ஆனால், உண்மை என்னவென்றால், சென்னை புறநகர் பகுதிகள் உட்பட, சென்னை புறநகர் காவல் நிலைய சரகங்களில் பொருத்தப்பட்ட கண்காணிப்புக் கேமிராக்கள் 1,07,425 மட்டும்தான். அவற்றில் குடியிருப்போர் நலச் சங்கங்கள், வியாபாரச் சங்கங்கள், சமூகப் பொறுப்பாளர்கள் நிதி மூலமாக அமைக்கப்பெற்றவை 43,673 கேமிராக்கள்; பொது மக்கள் சார்பாக வைக்கப்பட்ட தனியார் கேமிராக்கள் 60,730; சென்னை மாநகராட்சி, டாஸ்மாக் நிறுவனம் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களுடைய தொகுதி மேம்பாட்டு நிதி ஆகியவற்றின் மூலமாக

நிறுவப்பட்ட கேமிராக்கள் 4,022 மட்டுமே என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். கேமிராக்களை வைத்தார்களே தவிர, அதைப் பராமரிக்க கடந்த கால எந்த நடவடிக்கையையும் எடுக்கவில்லை. தி.மு.க அரசு பொறுப்பேற்ற பிறகு இதுகுறித்து ஆய்வு செய்து, கேமிராக்களை வைக்க, பராமரிக்க தனி நிதி ஒதுக்கி செயல்படுத்துவது குறித்து அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன. அதன்படி நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

சட்டமன்ற நடவடிக்கைகளை நேரடி ஒளிபரப்பு செய்வது குறித்து மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசினார்கள். நான் சொல்ல விரும்புவது, "அரசிடம் நிதி இல்லை. அதனால் ஒளிபரப்ப முடியாது" என்ற கடந்த கால அரசு உயர் நீதிமன்றத்தில் சொல்லியிருக்கிறது. பொதுநல வழக்கு விசாரணைக்கு வந்தபோது, அப்படிக் கூறிய ஆட்சிதான் அ.தி.மு.க ஆட்சி. ஆனால், எங்களைப் பொறுத்தவரையில், "சட்டமன்ற நடவடிக்கைகள் நேரடி ஒளிபரப்பு செய்யப்படும்" என்று தேர்தல் வாக்குறுதியிலேயே சொல்லியிருக்கிறோம். அந்த வாக்குறுதி விரைவில் நிறைவேற்றப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

அ.தி.மு.க. ஆட்சியில் சாலை விபத்துகள் குறைந்த மாநிலமாக தமிழ்நாடு இருக்கிறது என்று மாண்புமிகு ஒன்றிய அமைச்சர் திரு. நிதின் கட்கரி அவர்கள் கூறியிருப்பதாக இங்கே பேசினார்கள். குற்றங்கள் மற்றும் குற்றவாளிகளை கண்டுபிடிக்கும் வலைப்பின்னல் வழிமுறை CCTNS புள்ளிவிவரங்களை ஆய்வு செய்ததில் வேறு மாதிரியான தகவல்கள் கிடைத்துள்ளன. Cognos என்ற

மென்பொருளைப் பயன்படுத்தி, CCTNS-ல் பெறப்பட்ட தகவல்களுக்கும், இதே திட்டத்தின்கீழ், பழைய முறைகளின்படி மாவட்டங்களில் பதிவேற்றம் செய்யப்பட்ட தகவல்களுக்கும் இடையே வேறுபாடுகள் இருக்கின்றன. ஆகவே, விபத்து இறப்புகளைக் குறைப்பதில் தமிழ்நாடு இந்தியாவிலேயே முதல் மாநிலம் என ஒன்றிய அரசுக்கும், உச்ச நீதிமன்றத்திற்கும் தவறான தகவல் தரப்பட்டுள்ளது என்பதைப் பதிவு செய்ய நான் விரும்புகிறேன். அதுகுறித்து விரிவான விசாரணைக்கு நான் உத்தரவிட்டிருக்கிறேன்.

தமிழ்நாடு காவல் அங்காடிப் பொருள்களுக்கு GST-யிலிருந்து விலக்கு பெற வேண்டும் என்று மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். முதலில் இந்தத் திட்டம் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களால் முதலமைச்சராக இருந்தபோது கொண்டுவரப்பட்டதாகும். அதுமட்டுமின்றி, 14.5 விழுக்காடு வரை மதிப்புக் கூட்டு வரியிலிருந்தும் விலக்கு அளித்தவர் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள். GST-யிலிருந்து விலக்கு பெறுவதைப் பொறுத்தமட்டிலும் சொல்ல வேண்டுமென்றால், அ.தி.மு.க ஆட்சியில் இருந்தபோது, 42 GST கூட்டங்கள் நடைபெற்றிருக்கின்றன. அந்த 42 கூட்டங்களிலும் அப்போது ஆளுங்கட்சியாக இருந்த நீங்கள் அரசின் சார்பாக கலந்து கொண்டிருக்கிறீர்கள். ஆனாலும், கூட்டணிக் கட்சியாக இருக்கும் ஒன்றிய அரசிடம் இந்தச் சலுகைகளை நீங்கள் பெற முடியவில்லை. மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இதை நேர்மையாக ஒப்புக்கொண்டிருக்கிறார். இந்த அரசு நிச்சயமாக GST-லிருந்து காவல் அங்காடிப் பொருள்களுக்கு

விலக்கு பெற விரைந்து நடவடிக்கை எடுக்கும் என்று நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், காவல் துறைக்கு அ.தி.மு.க. ஆட்சியில்தான் அதிக நிதி ஒதுக்கப்பட்டது என்று கூறினார். ஆனால், அ.தி.மு.க. ஆட்சியின் இறுதியில் காவல் துறைக்காக மொத்தமாக செலவிடப்பட்ட தொகை 10.01 விழுக்காடுதான். ஆனால், 2010 தி.மு.க. ஆட்சியில், காவல் துறைக்காக செலவிடப்பட்டது 12.27 விழுக்காடு. 10 ஆண்டுகளுக்கு முன்பே, அதாவது 2 விழுக்காடு நிதியை அதிகம் செலவிட்டு, காவல் துறையை நவீனப்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இதில், ஒதுக்கிய தொகையைப் பார்க்கக்கூடாது. செலவிடப்பட்ட விழுக்காட்டைத்தான் பார்க்க வேண்டும் என்பதையும் நான் குறிப்பிட விரும்புகிறேன்.

சட்டத்தின் ஆட்சிக்கு இந்த அரசு மதிப்பளிக்கும். ஜெ.ஜெ. நகர் அம்மா உணவக சம்பவம், சென்னையில் ஆட்டோ ஓட்டுநர் பெண் ஆய்வாளரிடம் கொரோனா ஊரடங்கின்போது தகராறு செய்த சம்பவம், திருச்சி மாவட்டத்தில் மணல் கடத்தல் நடைபெற்றதாகக் கூறப்பட்ட நிகழ்வு, திருச்சி மாவட்டத்தில் நில அளவை தனி வட்டாட்சியர் தாக்கப்பட்டதாகக் கொடுக்கப்பட்ட புகார், திருநெல்வேலி மாநகர் கோட்டை காவல் நிலையத்தில் பெண் ஒருவரை சகோதரர் தாக்கியதால் கத்திக்குத்து நடைபெற்றிருக்கிறது. இதுபோன்ற சம்பவங்களை இங்கே எதிர்க்கட்சித் தலைவர் உள்ளிட்ட உறுப்பினர்கள்

எழுப்பினார்கள். அவை எல்லாவற்றுக்கும் புகார் அளிக்கப்பட்ட அதே நாளிலோ அல்லது அடுத்த நாளிலோ கைது செய்யப்பட்டு, சட்டத்தின் ஆட்சியை நிலைநாட்டியிருக்கின்ற ஆட்சிதான் கழக ஆட்சி என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

ஆனால், கடந்த அ.தி.மு.க. ஆட்சியில் பொள்ளாச்சி பாலியல் வன்கொடுமை வழக்கில் குற்றம் சாட்டப்பட்டவர்கள் கைது செய்யப்பட எவ்வளவு காலம் ஆனது என்பது உங்களுக்குத் தெரியும். அதேபோல, மறைந்த முதலமைச்சர் அம்மையார் ஜெயலலிதா அவர்களுடைய முகாம் அலுவலகமாக செயல்பட்ட கொடநாடு பங்களாவில் நடைபெற்ற கொள்ளை, கொலை சம்பவங்களில் தொடர்புடையோர் கைது செய்யப்பட எவ்வளவு காலம் ஆனது என்பதையும் சற்று நீங்கள் எண்ணிப் பார்த்திட வேண்டும்.

காவல் துறை மானியக் கோரிக்கை விவாதத்தின்போது கடந்த 9 ஆம் தேதியன்று பேசிய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், 'கொடநாடு வழக்கை நடத்துங்கள், வேண்டாமென்று சொல்லவில்லை; புது விசாரணை செய்யுங்கள், நாங்கள் வேண்டாமென்று சொல்லவில்லை' என்று சொன்னார்கள். அதற்காக நான் அவருக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். கொடநாடு வழக்கை நடத்துவோம். உண்மைக் குற்றவாளிகள் யாராக இருந்தாலும் அவர்கள் தப்பிக்க முடியாதென்பதை இந்த மாமன்றத்திற்கு நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

'வழக்கு நீதிமன்றத்தில் நடந்துகொண்டிருக்கிறது; வேண்டுமென்றே திட்டமிட்டு எங்கள்மீது குற்றம்சாட்டுவதைத் தவிர்க்க வேண்டும்' என்று எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் அன்றைக்குச் சொன்னார்கள். கொடநாடு வழக்கு நீதிமன்றத்தில் இருக்கும்போது இந்த அவையிலே கொடநாடு வழக்கு பற்றி முதலில் பேசியது யார்? மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்தான். கடந்த ஆகஸ்ட் 18 ஆம் நாளன்று இந்த அவையில் அந்தப் பிரச்சினையைக் கிளப்பினார்கள்; வெளிநடப்பு செய்தார்கள். வழக்கு முடியும் தருவாயில் இருக்கும்போது எதற்காக மேல் விசாரணை செய்ய வேண்டுமென்று பேட்டியும் கொடுத்தார். என்னைப் போன்றவர்களுக்கே தி.மு.க. ஆட்சியில் பாதுகாப்பில்லை என்றும் பேட்டியளித்தார்கள். மறுநாள் ஆகஸ்ட் 19 அன்று மாண்புமிகு ஆளுநர் அவர்களைச் சந்தித்து எதிர்க்கட்சித் தலைவர் மனுவும் கொடுத்திருக்கிறார். நிர்பந்தம் காரணமாக காவல் துறையினர் மேல் விசாரணை நடத்துகிறார்கள் என்று குற்றம் சாட்டியிருக்கிறார். முடியும் தருவாயில் உள்ள வழக்கை மீண்டும் எதற்காக விசாரணை செய்கிறார்கள் என்று எதிர்க்கட்சித் தலைவர் கேட்டார்கள். அதாவது, நீதிமன்றத்தில் உள்ள வழக்கை சட்டமன்றத்தில் எழுப்பியது யார்? நாங்களல்ல என்பதையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

பாவேந்தர் பாரதிதாசனின் கவிதை வரிகளிலே இரண்டு சொற்களை மட்டும் மாற்றி எனது பதிலுரையை நிறைவு செய்திட நான் விரும்புகிறேன்.

"புதியதோர் நாடு செய்வோம் -

கெட்ட போரிடும் குணத்தை வேரோடு சாய்ப்போம்

பொதுஉடைமைக் கொள்கை திசையெட்டும் சேர்ப்போம்

புனிதமோடதை எங்கள் உயிரென்று காப்போம்

இதயமெலாம் அன்பு நதியினில் நனைப்போம்

இது எனதென்னுமோர் கொடுமையைத் தவிர்ப்போம்

உணர்வெனும் கனலிடை அயர்வினை எரிப்போம்

ஒருபொருள்தனி எனும் மனிதரைச் சிரிப்போம்

இயல்பொருள் பயன்தர மறுத்திடில் பசிப்போம்

ஈவதுண்டாம் எனில் அனைவரும் புசிப்போம்"

இந்த வரிகளை என்னுடைய மன நிறைவுக்காக மட்டும் நான் இங்கே சொல்லவில்லை. இங்கே வீற்றிருக்கும் மாண்புமிகு உறுப்பினர்களுக்கும், காவல் துறையிலே பணியாற்றுபவர்களும், பாவேந்தர் பாடலின் பொருள் ஆழத்தைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். போலீஸ் துறையில் இருக்கின்ற சிலபல குறைபாடுகள் நீக்கப்படுவதற்காக சமுதாயத்தினுடைய நேர்த்தியும் வளர வேண்டும். அது வளர வளர அந்தக் குறைபாடுகள் தானாகவே குறையுமென்று பேரறிஞர் அண்ணா அவர்கள் அரை நூற்றாண்டுக்கு முன்னரே சொல்லியிருக்கிறார்கள். வெற்றி அலங்காரத்திற்காக அல்ல, அனைவரும் அகத்திலே கொள்வதற்காக அணுகுமுறையினைச் செம்மைப்படுத்திக்

கொள்வதற்காக சொன்ன பொன்மொழிதான் என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அந்த வழியில் தமிழ்நாடு காவல் துறை நமது அரசின் ஆட்சியில் செவ்வனே செயல்பட்டு வருகிறது.

தமிழ்நாட்டை சட்டத்தின் ஆட்சியில் நாட்டிலே முதன்மை மாநிலமாக்கிட தேவையான அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொண்டு, தெரிவிப்பதோடு மட்டுமல்ல, உறுதியும் சொல்கிறேன். இந்தக் காவல் துறையின் மானியக் கோரிக்கை விவாதத்திலே பங்கெடுத்து உரையாற்றிய அனைவருக்கும் நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**(பின்னர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் காவல் மற்றும் தீயணைப்புத் துறைகள் தொடர்பான அறிவிப்புகளை வெளியிட்டார்.)**

. . .

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை - 9